## வகுப்பு - 7 - பருவம் - 2 - வரலாறு
## 3. மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி

**பயிற்சி வினாக்கள்**

1. அந்நிய படையெடுப்பாளர்களிடமிருந்து மராத்தியருக்கு பாதுகாப்பளித்தது

   (1) காடுகள் (2) பாறைகளும் குன்றுகளும்

   (3) ஆறுகள் (4) நீர்வீழ்ச்சிகள்

2. மராத்தியர்களின் 'கொரில்லா' போர்முறை என்பது _______ தாக்குவது.

   (1) மறைந்திருந்து (2) நேருக்கு நேர்

   (3) கடல்வழியாக (4) வான்வழியாக

3. மராத்தியர் காலத்தை சேராத பக்தி இயக்க பெரியவர் _______.

   (1) ஏக்நாத் (2) கபீர்தாசர் (3) ராம்தாஸ் (4) துக்காராம்

4. மராத்திய பேரரசர் சிவாஜி கி.பி. _______ இல் பிறந்தார்.

   (1) 1625 (2) 1626 (3) 1627 (4) 162

5. தாதாஜி கொண்டதேவ் _______ ன் பாதுகாவலர்.

   (1) ஷாகு (2) சாம்பாஜி (3) ராஜாராம் (4) சிவாஜி

6. சிவாஜி முதன்முதலாக கைப்பற்றியது _______ கோட்டை.

   (1) தோர்னா (2) கோண்டுவானா (3) ரெய்கார் (4) சிவனேரி

7. 1659 இல் பீஜப்பூரின் தளபதியான _______ சிவாஜி கொன்றார்.

   (1) அப்சல்கானை (2) அகமதுகானை

   (3) ஆரம்கானை (4) முகமதுஷாவை

8. சிவாஜிக்கு எதிராக அனுப்பப்பட்ட ராஜபுத்திர தளபதி _______.

   (1) ராஜா மான்சிங் (2) ராஜா தோடர்மால்

LIVEWORKSHEETS

(3) ராஜா ஜெய்சிங் (4) ராஜா விஜய்சிங்

9. 'சத்ரபதி' என்ற சொல்லின் பொருள் _______.

(1) சிங்கம் (2) அரசன் / பேரரசன்

(3) அழகன் (4) வீரன்

10. சிவாஜி முடிசூட்டிக் கொண்ட ஆண்டு _______.

(1) 1761 (2) 1672 (3) 1673 (4) 1674

11. சிவாஜியின் முடிசூட்டுவிழா _______ கோட்டையில் நடைபெற்றது.

(1) தோர்னா (2) சிவனேரி (3) ரெய்கார் (4) பீஜப்பூர்

12. 20 முதல் 100 கிராமங்கள் _______ என்பவர்களால் நிர்வகிக்கப்பட்டது.

(1) குல்கர்னி (2) பட்டீல் (3) தாகூர் (4) தேஷ்முக்

13. _______ என்பவர் கிராமத்தில் அதிகாரமிக்க கிராமத் தலைவராக இருந்தார்.

(1) குல்கர்னி (2) பட்டீல் (3) தாகூர் (4) தேஷ்முக்

14. சிவாஜியின் காலத்தில் குல்கர்னி என்பவர் _______.

(1) கிராமத்தலைவர் (2) படைவீரர்

(3) ஆவணக் காப்பாளார் (4) கணக்கர்

15. தொடக்க காலத்தில் சிவாஜியின் இராணுவத்தின் முதுகெலும்பாக இருந்தது

(1) யானைப்படை (2) குதிரைப்படை

(3) காலாட்படை (4) ஒட்டகப்படை

16. கூற்று: சிவாஜி ஒவ்வொரு படைவீரரையும் நேரடியாகத் தேர்ந்தெடுத்தார்.

காரணம்: தம்முடைய கோட்டைகளின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் சிவாஜி மிக முக்கிய கவனம் செலுத்தினார்.

(1) கூற்று சரி,காரணம் தவறு (2) கூற்று தவறு, காரணம் சரி

(3) கூற்றிற்கான காரணம் சரி (4) கூற்றிற்கான காரணம் தவறு

LIVEWORKSHEETS

17. சிவாஜியின் அஷ்டப்பிரதான் என்பது _______ அமைச்சர்கள் கொண்ட குழுவாகும்.

(1) 6 (2) 7 (3) 8 (4) 9

18. தவறான இணையை கண்டுபிடி.

(1) அமத்தியா - நிதியமைச்சர்

(2) நியாயதிஸ் - தலைமைத் தளபதி

(3) சச்சீவ் - செயலர்

(4) பண்டிட்ராவ் - தலைமை அர்ச்சகர்

19. அரசருக்கு கட்டணமாக செலுத்தப்படும் வரி _______.

(1) சவுத் (2) சர்தேஷ்முகி (3) ஜிசியா (4) கிரஜ்

20. சுமந்த் என்பவர் _______ அமைச்சர்.

(1) பிரதம அமைச்சர் (2) வெளியுறவுத்துறை

(3) உள்துறை (4) நிதி

21. ஔரங்கசீப்புக்கு எதிராக கலகம் செய்த அவரது மகன் _______.

(1) பகதுர்ஷா (2) அசம்ஷா (3) முகமது கம்பக்ஷ் (4) முகமது அக்பர்

22. சாம்பாஜி _______ ன் மகன் அக்பருக்கு அடைக்கலம் கொடுத்தார்.

(1) பாபர் (2) ஔரங்கசீப் (3) சிவாஜி (4) ஷாஜகான்

23. பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் ஔரங்கசீப் கைப்பற்றிய ஆண்டு

(1) 1684 (2) 1685 (3) 1686 (4) 1687

24. _______ கவிகலாஷ் என்ற தனது குருவின் கட்டுப்பாட்டில் இருந்தார்.

(1) சிவாஜி (2) ஷாஜி (3) சாம்பாஜி (4) ஷாகு

25. சிவாஜியின் பேரன் ஷாகு பதவிக்கு வந்த ஆண்டு _______.

(1) 1706 (2) 1707 (3) 1708 (4) 1709

LIVEWORKSHEETS

26. ஷாகுவுக்கு / சிவாஜியின் பேரனுக்கு 'ஷாகு' என பெயர் சூட்டியவர் ______.

(1) சிவாஜி (2) சாம்பாஜி (3) அனாஜி (4) ஔரங்கசீப்

27. 'நேர்மையானவர்' என்ற பொருள் கொண்ட பெயர் ______.

(1) சிவாஜி (2) ஷாஜி (3) சாம்பாஜி (4) ஷாகு

28. கூற்று: ஷாகுவின் ஆட்சியில் வலுவான அரச கட்டமைப்பு உருவானது.

காரணம்: ஷாகுவிடம் பணிபுரிந்தோருக்கு அதிகாரபூர்வமான உரிமைகள் வழங்கப்படவில்லை.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று தவறு, காரணம் சரி

(3) கூற்று காரணம் இரண்டும் சரி (4) கூற்று காரணம் இரண்டும் தவறு

29. ஷாகு சுமார் ______ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

(1) 45 (2) 30 (3) 40 (4) 10

30. ஷாகுவின் ஆட்சிக்காலம் ______ முதல் ______ வரை.

(1) 1707 - 1749 (2) 1707 - 1047 (3) 1708 - 1748 (4) 1708 - 1749

31. ஷாகுவிடம் வருவாய்த்துறை அலுவலராக இருந்து பேஷ்வாவாக ஆனவர்

(1) பாஜிராவ் (2) பாலாஜி விஸ்வநாத்

(3) பாலாஜி பாஜிராவ் (4) ரகுநாத்ராவ்

32. பாஜிராவ் இராணுவத்தில் மாற்றம் செய்தபோது பாரம்பரிய செல்வாக்குமிக்க ______ களுக்கு அதிகாரத்தை குறைத்தார்.

(1) கெய்க்வாட் (2) ஹோல்கர் (3) சிந்தியா (4) தேஷ்முக்

33. மகாராஷ்டிரத்தின் அரசனாக, பேரரசர் ஷாகுவால் அங்கீகரிக்கப்பட்டவர் ______.

(1) பாஜிராவ் (2) பாலாஜி விஸ்வநாத்

(3) பாலாஜி பாஜிராவ் (4) ரகுநாத்ராவ்

34. பொருத்துக.

LIVEWORKSHEETS

(a) பேஷ்வா - அ. பரோடா

(b) ஹோல்கர் - ஆ. குவாலியர்

(c) சிந்தியா - இ. இந்தூர்

(d) கெய்க்வாட் - ஈ. நாக்பூர்

(e) பான்ஸ்லே - உ. பூனே

(1) a-உ, b-இ, c-அ, d-ஆ, e-ஈ (2) a-ஈ, b-அ, c-ஆ, d-இ, e-உ

(3) a-உ, b-இ, c-ஆ, d-அ, e-ஈ (4) a-அ, b-ஆ, c-உ, d-ஈ, e-இ

35. பாலாஜி பாஜிராவ் தனது தலைநகரை சத்தாராவிலிருந்து ______ க்கு மாற்றினார்.

(1) குவாலியர் (2) நாக்பூர் (3) பூனே (4) பரோடா

LIVEWORKSHEETS